மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 7—5—1990 காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 13.02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

89. சென்னை, சேத்துப்பட்டு, தோராசிக் மருந்துகள் கழகத்தினருக்காக, திருவாளர்கள் வி. எஸ். டி. மோட்டார்கள் (தனியார்) நிறுவனத்தாரால் எக்ஸ்ரே கருவியுடன் வடிவமைக்கப்பட்ட மோட்டார் வாகனத்திற்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 2—11—1989 ஆம் நாளிட்ட 842 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

90. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 30—11—1989 ஆம் நாளிட்ட 852 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

91. சென்னை, தாம்பரம், இந்து மிஷன் மருத்துவ நிலையத்தினருக்கு விற்பனை செய்யப்படும் மருந்துப் பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 7—12—1989-ஆம் நாளிட்ட 865 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959] 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

92. தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்டின் 1988-89 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள்

1990 மே 5]

சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

ஆ அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

167. கோரிக்கை எண். 8—தேர்தல்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு. 1990-91. (தமிழ், ஆங்கிலம்).

168. மதிப்பீட்டுக் குழுவின் நான்காவது அறிக்கை. 1989-90.

169. மதிப்பீட்டுக் குழுவின் ஐந்தாவது அறிக்கை. 1989-90.

170. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தி மூன்றாவது அறிக்கை. 1989-90.

171. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தி நான்காவது அறிக்கை, 1989-90.

172. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தைந்தாவது அறிக்கை, 1989-90.

173. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தொன்பதாவது அறிக்கை, 1989-90.

174. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பதாவது அறிக்கை, 1989-90.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS